**செய்தி வெளியீடு எண் : 1140** **நாள் : 04.08.2024**

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (4.8.2024) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில், பள்ளிக் கல்வித் துறை சார்பில் 2023 – 2024 ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற சர்வதேச / தேசிய / மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற மாணவ, மாணவியர் மற்றும் 10, 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் 100% தேர்ச்சி பெற்ற தனியார் பள்ளிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி ஆற்றிய விழாப்பேருரை**

சென்ற கல்வி ஆண்டில் நடைபெற்ற சர்வதேச தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டு போட்டிகளில் பதக்கங்களை வென்ற மாணவ மாணவிகளுக்கும், அதேபோல 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் 100% தேர்ச்சி பெற்ற தனியார் பள்ளிகளுக்கும் பாராட்டு சான்றிதழ் வழங்குகின்ற இந்த சிறப்பான விழாவில் பங்கேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன். இந்த விழாவில் பங்கேற்கும் வாய்ப்பை எனக்கு தந்த பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை. நீங்கள் அனைவரும் வீட்டில் ரிலாக்ஸாக இருந்திருக்க வேண்டும். இங்கு அழைத்துவந்து விட்டார்கள் என்ற கவலை ஏதுமின்றி, உற்சாகத்துடன் இங்க வந்து அமர்ந்துள்ளீர்கள். உங்களை பார்க்கும் போது அதே உற்சாகமும் மகிழ்ச்சியும் எங்களுக்கும் வந்திருக்கிறது. திராவிட இயக்கத்தில் இருந்துவரும் ஒவ்வொரு தொண்டருக்கும் படிக்கும் மாணவர்களைப் பார்த்தால் ஒரு தனி மகிழ்ச்சி ஏற்படும். அதற்கு ஒரு எடுத்துக்காட்டு, ஒரு நிகழ்ச்சியை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஒரு முறை தந்தைப் பெரியார் அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தை முடித்து விட்டு

சாலையில் அவரது வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தார். அந்த வழியாக பெண் குழந்தைகள் பள்ளிக்கூடத்தை முடித்துவிட்டு அவர்கள் சீருடையில் நடந்து சென்றார்கள். அப்போது, தந்தைப் பெரியாருக்கு 94 வயது. அவரது வாகனத்தில் உட்கார்ந்தபடியே அந்த காட்சியைப் பார்த்துக்கொண்டு, ஒரு சின்னக் குழந்தை போல், உற்சாகமாக அந்தப் பெண் குழந்தைகளைப் பார்த்து கைதட்டி ரசித்து மகிழ்ந்தார். இதற்கு தானே நான் காலம் முழுவதும் போராடினேன். திராவிட இயக்கத்தின் கருணை இதோ நான் என் கண் முன்பே பார்த்துவிட்டேன். அப்படி என்ற மகிழ்ச்சி தான் தந்தை பெரியாரின் மகிழ்ச்சி துள்ளச் செய்தது. மாணவிகள் பள்ளிக்கு நடந்து போவதைப் பார்த்த பெரியார் மகிழ்ச்சி அடைந்தார். கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபொழுது மாணவ–மாணவிகள் பள்ளிக்கு நடந்து போகக் கூடாது என்று அவர்களுக்கு பஸ் பாஸ் வழங்கி பேருந்துத் திட்டத்தை அளித்து பேருந்தில் போக வைத்தார் முத்தமிழ் கலைஞர் அவர்கள். தந்தை பெரியாருக்கும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும் ஏற்பட்டுள்ள அந்த மகிழ்ச்சி தான், இன்றைக்கு இங்கு வந்துள்ள மாணவச் செல்வங்களைப் பார்க்கும் போது எங்கள் அத்தனை பேருக்கும் ஏற்படுகின்றது. இந்த மகிழ்ச்சி எல்லா நாளும் தொடர வேண்டும் என்பதுதான் நம்முடைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவருடைய ஒரே இலட்சியம். நம்முடைய குழந்தைகள் அனைவரும் பள்ளிப்படிப்பை நன்றாகப் படிக்க வேண்டும். பள்ளிப் படிப்பை முடித்த அத்தனை மாணவர்களும், பள்ளி படிப்பு மட்டும் போதாது, உயர் கல்வியிலும் சேரவேண்டும். உயர்கல்வி படிக்கின்ற மாணவர்கள் எல்லாம் இன்ஜினியராக, ஆராய்ச்சியாளர்களாக, மருத்துவர்களாக, அரசு அதிகாரிகளாக பெரிய பெரிய பொறுப்புகளுக்கு வரவேண்டும் என்பதுதான் நம்முடைய முதலமைச்சர் உடைய

நம்முடைய திராவிட மக்கள் அவருடைய ஒரே லட்சியம். அதற்கு ஏற்றவாறு தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பலத் திட்டங்களைத் தந்துக்கொண்டிருக்கின்றார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரை அரசுப் பள்ளி, தனியார் பள்ளி என்று அவர் பிரித்து பார்ப்பது கிடையாது. இன்றும் குறிப்பிட்டு சொல்லவேண்டும் என்றால், தனியார் பள்ளியில் இருக்கும் அத்தனை வசதிகளும், அரசு பள்ளிகளுக்கும் வரவேண்டும் என்றுதான் ஒவ்வொரு திட்டத்தையும் அவர் பார்த்து பார்த்து செய்து கொண்டிருக்கிறார். தமிழ்நாடு கல்வியில் என்று முன்னேறிய மாநிலமாக இருக்கிறது என்றால் அதற்காக நம்முடைய திராவிடமாடல் அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு தனியார் பள்ளிகள் நீங்கள் அளிக்கின்ற ஒத்துழைப்பு மிகமிக முக்கியமானது. இன்றைக்கு பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு கல்லூரிகளில் சேராமல் இருக்கும் மாணவர்கள் எல்லாம் தொடர்பு கொண்டு அவர்கள் எல்லாம் உயர் கல்வியில் சேர்க்க வேண்டும் என்பதற்காக தான் நம்முடைய அரசு தனி முயற்சி எடுத்து வருகின்றது. அதே போல், விளையாட்டில் சேர்ந்தவர்கள் அனைவருக்கும் இந்த அரசு எல்லா வகையிலும் உதவ தயாராக இருக்கின்றது. விளையாட்டுத் துறையில் சாதிக்கின்ற திறமையாளர்களுக்கு உதவிட தமிழ்நாடு அரசு இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுன்டேஷன் என்ற திட்டத்தை அறக்கட்டளை தொடங்கப்பட்டு இருக்கிறது. இந்த அறக்கட்டளை மூலமாக நூற்றுக்கணக்கான விளையாட்டுகளுக்கு இதுவரை இந்த ஒரு வருடத்தில் மட்டும் ரூபாய் 10 கோடி அளவுக்கு அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுதவிர சர்வதேச தேசிய அளவிலான போட்டிகளில் சாதிக்கின்ற மாணவர்களுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்கி தமிழக அரசு

கௌரவப்படுத்தியும், ஊக்கப்படுத்தியும் வருகின்றது. இன்றைக்கு பாராட்டு சான்றிதழ் பெற்று இருக்கின்ற பள்ளி மாணவர்கள் நாளைக்கு தமிழ் நாட்டுக்கு பெருமை சேர்க்கும் வகையில் தொடர்ந்து பல்வேறு போட்டிகளில் பங்கேற்று பதக்கங்களையும் கோப்பைகளையும் பெற வேண்டும். அதற்கு என்னென்ன தேவையோ அத்தனை உதவிகளையும் நம்முடைய தமிழக அரசு தர தயாராக இருக்கின்றது. ஆகவே மாணவர்களாகிய நீங்கள் உங்கள் திறமைகளை வளர்த்துகொள்வதில் நன்றாக கவனம் செலுத்துங்கள். இந்த நேரத்தில் மாணவிகளுக்கும் தனியார் பள்ளியைச் சார்ந்தவர்களுக்கும் ஒரு விஷயத்தை சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். படிப்பு என்று சொன்னால் பாடத்தில் உள்ளதை மட்டுமே வெறுமனே மனப்பாடம் செய்து தேர்வு எழுதி, மதிப்பெண் வாங்குவது மட்டும் தான் கல்வி என்பது கிடையாது. உண்மையான படிப்பு என்றால், பாடத்தில் உள்ளதை நன்றாக புரிந்து கொண்டு படிக்க வேண்டும். அறிவைப் பயன்படுத்துவதற்கு மட்டும் எல்லா இடத்திலும் மரியாதையும் சிறப்பும் தானாகவே கிடைக்கும். அறிவைப் பயன்படுத்தாமல் வைத்திருப்பதால் எந்த பயனும் இல்லை. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டை முன்னிட்டு அண்ணா நூற்றாண்டு நூலகத்தை சென்னையில் திறந்து வைத்தார்கள். நம்முடைய முதலமைச்சர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை மதுரையில் திறந்து வைத்தார்கள். 10 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் அந்த நூலகத்திற்கு சென்று படித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பல்வேறு ஊர்களில் இருந்து மாணவர்கள் படையெடுக்கின்றார்கள். விரைவில் கோவையிலும், திருச்சியிலும் கலைஞர் நூற்றாண்டு நூலகம் அமைய இருக்கின்றது. கட்டாய கல்வி உரிமைச் சட்டம் படி, வறுமையில் இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு தனியார் பள்ளிகளில் 25

சதவீத இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். இந்த சட்டத்தை செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது. இந்த சட்டத்தின்படி சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தை ஆண்டுதோறும் தனியார் பள்ளிகளுக்கு அரசே வழங்க வேண்டும் என்பது சட்டம். ஆனால், முந்தைய ஆட்சிக் காலங்ளில் இந்த தொகையை தாமதமாக தான் தனியார் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டது. ஆனால், திராவிடமாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு சுமார் 1200 கோடி ரூபாயை பள்ளிகளுக்கு வழங்க அரசாணை வெளியிடப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இனி வரும் கல்வியாண்டுகளில் இந்த குழந்தைகளுக்கான கல்வி கட்டண தொகையை அந்தந்த ஆண்டே வழங்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். எனவே, அரசு பள்ளிகளின் வளர்ச்சி மட்டுமின்றி தனியார் பள்ளிகளின் முன்னேற்றத்திற்கும் நம்முடைய திராவிடமாடல் அரசு என்றைக்கும் துணை நிற்கும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கு நிறைய ஆசிரியர்பெருமக்கள் வந்துள்ளீர்கள். எப்பொழுதும் சொல்வது போல் உங்களுக்கும் ஒரு வேண்டுகோள். நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதிமாறன் அவர்கள் பேசும் போது, சென்ற கேலோ இந்தியா போட்டியில் போது இந்தியா வரிசையில் நம்முடைய மாநிலம் ஆறாவது இடத்தைப் பிடித்தது என்று சொன்னார். அதில் ஒரு சின்ன திருத்தம். தமிழ்நாடு 2–வது இடத்தைப் பெற்றது. முதல் முறையாக பதக்கப்பட்டியலில் கேலோ இந்தியா போட்டியில் 2–வது இடத்தை தமிழ் நாட்டு வீரர் வீராங்கனைகள் பிடித்தனர். ஆசிரியர்களுக்கு மீண்டும் ஒரு வேண்டுகோள். விளையாட்டு வகுப்புகளை தயவு செய்து கடன் வாங்கி, கணிதம், அறிவியல் வகுப்புகள் நடத்தாதீர்கள். ஏனென்றால், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்

இந்நிகழ்ச்சியை நடத்தி இருந்தாலும், இந்த நிகழ்ச்சி நடப்பது ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கம் (விளையாட்டு திடல்). கல்வி எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு உடற்பயிற்சியும் விளையாட்டும் முக்கியம். நன்றாக விளையாடும் குழந்தைக்கு நல்ல ஆரோக்கியம் கண்டிப்பாக இருக்கும். நல்ல ஆரோக்கியம் இருந்தால் நன்றாக படிப்பார்கள். எனவே, விளையாட்டு வகுப்புகளை தயவு செய்து கடன் வாங்காதீர்கள் என்று கணிதம், அறிவியல் ஆசிரியர்களை மீண்டும் நான் கேட்டுக் கொண்டு, இங்கு பாராட்டுச் சான்றிதழை பெற்று உள்ள தனியார் பள்ளிகளுக்கும், மாணவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைப்பெறுகின்றேன்.

நன்றி. வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu